

"உங்களுக்கே நீங்கள் ஒரு வாய்ப்பளியுங்கள். குடும்பமாக சென்று ஆசீரைப் பெற்றுக்கொள்ளுங்கள்."

தயாரித்தவர்கள்:
Charis (CCR) ArchKL

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 22/2023

**ஊக்குவிக்கப்பட்ட அதன் நான்கு நோக்கங்கள்:**

1. தூய ஆவியால் பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் வழியாக, தூய ஆவியில் வாழ்வது
2. திருஅவைக்குள் ஒற்றுமை
3. கிறிஸ்துவ சபைகள்
4. ஏழைகளுக்கும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் பணி செய்தல்

இவ்வாறு அருங்கொடை செபக்குழுக்களை நாம் ஆதரிப்பதன் வழியாக, **தலைமைத்துவத்தில் வளர்ச்சி** எதிர்பார்த்ததை விட அதிகமாக ஏற்படுகிறது. இயேசுவை மையமாகக் கொண்டு இறைவார்த்தையில் வேரூன்றி, இருப்பதால், கடவுளுக்கு மாட்சி அளிக்கிறது.

புகழ்ச்சி ஆராதனையைப் பற்றி போதனைகள், அருளடையாளங்கள், திருவழிபாடு மற்றும் பங்கு வாழ்வு மற்றும் திட்டங்கள், தூய ஆவியைப் பற்றிய கருத்தரங்குகள், தூய ஆவியில் வளர்த்தல் ஆகியவற்றைப் பற்றி பல்வேறு நேரங்களில் **திட்டமிடுதல்**.

மையக்குழுக்களிடையே சிறப்புக் கூட்டங்கள், ஒருவருக்கொருவர் மனமாற்றம், வளர்ச்சி மற்றும் ஆண்டுத் தியானங்களை ஊக்குவித்தல். உறுப்பினர்களிடையே, ஒன்றுகூடுதலின் வழியாக நட்புறவை வளர்க்கவும், ஏற்றுக்கொள்ளவும், உதவுகிறது.

அன்புக் குடும்பங்களே, நாம் அனைவரும் ஒரு அற்புதமான குடும்ப வாழ்க்கையை விரும்புகிறோம். உங்களுடைய பங்குகளில் நடைபெறும் ஆண்டு அருங்கொடை செப ஒன்றுகூடுதலில் பங்கேற்க முயற்சி செய்யுங்கள். நம்முடைய குடும்ப வாழ்க்கையைப் புதுப்பித்துகொள்ளவும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் இது ஒரு சிறந்த வழியாகும். இறைவேண்டலில் இணைவது, புகழ்ச்சி ஆராதனை, பரிந்துரை இறைவேண்டல், நன்றி செலுத்துதல், மற்றும் தூய ஆவியின் வல்லமையைப் பற்றியும் அவற்றின் அனுபவங்களைப் பற்றியும் செவிமடுத்தல் ஆகியவற்றின் வழியாக நம்மை இணைத்துக்கொள்வோம்.

உங்களுக்கே நீங்கள் ஒரு வாய்ப்பளியுங்கள். குடும்பமாக சென்று ஆசீரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

தூய ஆவியாரே, வாரும். எனக்கு நீர் தேவை!. தூய ஆவியாரே வாரும். என் குடும்பத்திற்கு நீர் தேவை!

27 & 28 மே 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பெந்தகோஸ்தே ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, ( ... ல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)



மாதாந்திர கருப்பொருள்:
குடும்ப வாழ்வு

நிகழ்வின் நோக்கம்:
அனைத்துலக குடும்பங்கள் தினம்

2015 ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் ICCRS (அனைத்துலக கத்தோலிக்க அருங்கொடை புதுப்பித்தல் சேவைகள்) மற்றும் கத்தோலிக்க சகோதரத்துவம்( கிறிஸ்தவ சமூகங்களுக்கான உடன்படிக்கை) ஆகிய இரு அமைப்புகளின் தலைவர்களையும் உலக அளவில் அருங்கொடைப் புதுப்பித்தலுக்கான ஒரே சேவையை உருவாக்குவதன் நன்மைகளைப் பற்றி சிந்திக்க அழைத்தார். இந்த அழைப்பு, அக்டோபர் 31, 2018 ஆம் ஆண்டு CHARIS என்ற அமைப்பை உருவாக்க வழிவகுத்தது.

கத்தோலிக்க அருங்கொடையைப் புதுப்பிப்பதும்(CCR) தேவைகளை நிறைவேற்றுவதுமே இதன் நோக்கம். இது அனைவருக்குமிடையே, ஒற்றுமையை ஊக்குவிக்கிறது மற்றும் பலப்படுத்துகிறது. மேலும் உலகளாவிய குடும்ப உணர்வை வளர்க்கிறது.

CHARIS Malaysia (தீபகற்ம மலேசியா மற்றும் சபா சரவாக்கிற்கு சேவை செய்கிறது) ஆகஸ்ட் 10, 2020 அன்று உருவாக்கப்பட்டது. மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு (CBCM) இதன் சட்டங்களை அங்கீகரித்தது.